**உயர்ந்த ஆபத்து அல்லது குறைந்த ஆபத்து முடிவுகள்**
மாதிரி பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் கிடைக்கும் போது, பின்வருவதில் ஒன்று நிகழும்:

**அனைத்து கோளாறுகளுக்கும் உங்கள் குழந்தையின் முடிவுகள் எதிர்மறையாக இருக்கிறது.**
99 சதவீதத்திற்கும் மேலான குழந்தைகள் இந்த வகையில் தான் விழுகிறார்கள். இத்தகைய கோளாறுகள் இருப்பதற்கான மிகக் குறைந்த ஆபத்திலேயே உங்கள் குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதே இதன் பொருளாகும். அந்த முடிவானது உங்கள் குழந்தையின் மருத்துவப் பதிவேட்டில் கோப்பிடப்படும். மிக அரிதான நேரங்களில், மெட்டாபோலிக் பரிசோதனையில் ஒரு கோளாறு தெரியாமற் போய்விடலாம்.

**மறுபடியும் மாதிரி எடுப்பது அவசியமாகிறது.**
1000 குழந்தைகளில் சுமார் ஒரு குழந்தைக்கு ஒரு இரண்டாவது மாதிரி அவசியமாகின்றது. முதல் மாதிரி எல்லைக் கோட்டிலுள்ள முடிவுகளை காண்பிக்கிறதால் தான் வழக்கமாக இது அவசியமாகிறது, அதன் பொருளென்னவென்றால் ஒரு பிரச்சனை இருக்கிறதா இல்லையா என்பதை சொல்வது சாத்தியமில்லை என்பதேயாகும். மற்றொரு மாதிரி எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்வதற்காக நீங்கள் தொடர்பு கொள்ளப்படுவீர்கள்.

**அந்த நிலைமைகள் ஒன்றிற்கு உங்கள் குழந்தையின் முடிவு நேர்மறையாக உள்ளது.**
நேர்மறை முடிவைக் கொண்டிருப்பது என்பதற்கு உங்கள் குழந்தைக்கு ஒரு கோளாறு இருக்கிறது என்பதாக அர்த்தமாக வேண்டிய அவசியமில்லை. மேற்கொண்டு சோதனை செய்வது அவசியம் என்று மட்டுமே அது சொல்கிறது. மறுஆய்வு செய்து கண்டுபிடிப்பதற்காக ஓர் மெட்டாபோலிக் மருத்துவரிடம் ஏற்பாடு செய்வதற்காக நீங்கள் தொடர்பு கொள்ளப்படுவீர்கள். ஒரு நோய் அறியப்பட்டால், அப்போதே உங்கள் குழந்தைக்கு ஏற்ற சிகிச்சை கொடுக்கப்படும். சிங்கப்பூரிலுள்ள பெரும்பாலான குழந்தைகள் எதிர்மறையாகவே சோதித்தறியப்படுகிறார்கள். ஆரம்ப காலத்திலேயே நோயைக் கண்டறிந்து அவற்றிற்கு சிகிச்சையளிப்பதன் மூலம் வழக்கமாக இத்தகைய அரிய மற்றும் உயிரிழப்பை ஏற்படுத்தும் கோளாறுகள் தவிர்க்கப்பட முடியும்.

## தொடர்பில் இருங்கள்

சிங்கப்பூரில் மெட்டாபோலிக் பரிசோதனை பற்றிய அதிகத் தகவல்களுக்கு, உங்களது சுகாதாரக் கவனிப்பு வழங்குநரைத் தொடர்புகொள்ளுங்கள், அல்லது நேஷனல் எக்ஸ்பேண்டட் நியூபார்ன் லேபாரட்டரியை (தேசிய விரிவாக்கப்பட்ட பச்சிளங் குழந்தை பரிசோதனை ஆய்வுக்கூடம்) தொடர்புகொள்ளுங்கள்

**தொலைபேசி எண்: 6394-5049**

அல்லது நீங்கள் **Metabolic.Newborn.Screening@kkh.com.sg என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதலாம்.**

கேகே பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை (கேகேஎச்) அல்லது சிங்கப்பூர் ஜெனரல் ஹாஸ்பிட்டலில் (சிங்கப்பூர் பொது மருத்துவமனை) உங்கள் குழந்தையை நீங்கள் பெற்றெடுப்பீர்களானால், உங்கள் குழந்தை ஸ்க்ரீன் செய்யப்படும். மெட்டாபோலிக் பரிசோதனை செய்யப்படுவதை மறுப்பதற்கான உரிமை உங்களுக்குள்ளது என்பதை தயவுசெய்து குறித்துக் கொள்ளுங்கள். இது தான் உங்களது விருப்பமென்றால் உங்கள் சுகாதாரக் கவனிப்பு வழங்குநரிடம் பேசுங்கள்.

நீங்கள் கேகேஎச் அல்லது எஸ்ஜிஎச் தவிர வேறு ஓர் மருத்துவமனையில் குழந்தை பெற்றெடுப்பீர்களானால், அந்த சோதனை பற்றி உங்கள் சுகாதாரக் கவனிப்பு வழங்குநரிடம் கேளுங்கள்.

கூடுதல் தகவல்களை அறிந்துகொள்ள இங்கே ஸ்கேன் செய்யுங்கள்

**பயனுள்ள தொலைபேசி எண்**

| | |
|---|---|
| மத்திய நியமனங்கள் | 6294-4050 |


KK Women's and Children's Hospital
SingHealth

KK Women's and Children's Hospital
100 Bukit Timah Road
Singapore 229899
Tel: 6394-5049
Fax: 6394-3773
Website: www.kkh.com.sg
www.facebook.com/kkh.sg


Reg No 198904227G PLabmsn1019

KK Women's and Children's Hospital
SingHealth

# உங்களது பச்சிளங் குழந்தைக்கான ஸ்க்ரீனிங் சோதனைகள்



PATIENTS. AT THE HEART OF ALL WE DO.®



*வாழ்வின் ஓர் புதிய ஆரம்பம்* - *உங்கள் சந்தோஷத்தின் புதிய வரவால் நீங்கள் மகிழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். ஓர் பெற்றோராக, உங்கள் குழந்தையின் ஆரோக்கியம் தான் உங்களது முதல் முன்னுரிமை. வாழ்க்கையில் மிகச் சிறந்த ஆரம்பத்தை உங்கள் குழந்தை பெற்றுக்கொண்டு, ஆரோக்கியமாக இருக்கிறது என்பதை உறுதி செய்து கொள்ள, குறைந்தபட்சம் 40 அரிதான மருத்துவக் கோளாறுகளுக்காக உங்கள் பச்சிளங் குழந்தை பரிசோதனை செய்யப்பட முடியும்.*

இத்தகைய கோளாறுகளோடுள்ள பெரும்பாலான குழந்தைகள் பிறக்கும்போது ஆரோக்கியமாக இருப்பதாகத் தோன்றினாலும் கூட, பின் வாழ்வில் அவர்கள் கடுமையான ஆரோக்கியப் பிரச்சனைகளைக் கொண்டிருப்பதன் ஆபத்தில் இருக்கலாம். இவற்றில், கல்வி கற்பதில் சிரமங்கள், அடிக்கடி வருகிற உடல்நலக் குறைவு மற்றும் ஆரம்பத்திலேயே அவர்களது கோளாறு கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படாத பட்சத்தில் மரணம் ஆகியவை அடங்கியிருக்கலாம்.

**ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பது ஆரம்பத்திலேயே சிகிச்சையளிக்க அனுமதிக்கிறது**

இந்தக் கோளாறுகள் மிகவும் அரிதானதவை மற்றும் அவை சிங்கப்பூரில் நிகழ்கிற 3000 பிறப்புகளில் சுமார் ஒரு பிறப்பை மட்டுமே பாதிக்கின்றன. பச்சிளங் குழந்தைகளை அவர்களது வாழ்வின் முதல் சில நாட்களிலேயே சோதித்துப் பார்ப்பதின் மூலம், பெரும்பாலும் எந்தவொரு அடையாளம் அல்லது அறிகுறி தோன்றுவதற்கு முன்பே, அதுபோன்ற கோளாறுகளுக்கு சிகிச்சையளிக்கப்பட முடியும். இந்தக் கையிதழ் சிங்கப்பூரில் செய்யப்படுகின்ற பச்சிளங் குழந்தைக்கான ஸ்க்ரீனிங் பற்றிய, உங்களது பச்சிளங் குழந்தைக்கான அதன் பலன்கள் பற்றிய தகவல்களை வழங்குகிறது, மற்றும் நீங்கள் உங்கள் மனதில் கொண்டிருக்கக்கூடிய சில கேள்விகளுக்கான பதில்களை வழங்குகிறது.

பச்சிளங் குழந்தைக்கான ஸ்க்ரீனிங்கில் இடம்பெற்றுள்ள கோளாறுகளாவன:

**மெட்டாபோலிசத்தின் இயல்பான பிழைகள்**

கொழுப்புகள், புரதம் அல்லது சர்க்கரை போன்ற உணவு / பாலிலுள்ள சில வேதிப்பொருட்களை உடல் வெற்றிகரமாக உடைக்க முடியாமல் போகும்போது (மெட்டாபோலைஸ்), அவை தேங்க ஆரம்பித்து உடலுக்கு விஷத்தன்மை உடையதாக மாறிவிடுகிறது. அவை கடுமையான ஆரோக்கியப் பிரச்சனைகளை உண்டுபண்ணிவிடக் கூடும்.

பச்சிளங் குழந்தைக்கான ஸ்க்ரீனிங் பின்வரும் வகைகளிலுள்ள 30 மெட்டாபோலிக் கோளாறுகளுக்கும் அதிகமானவைகளைப் பார்வையிடுகிறது:

- ஆர்கானிக் ஆசிட் டிஸார்டர்ஸ் (கரிம அமில கோளாறுகள்)
- ஃபேட்டி ஆசிட் டிஸார்டர்ஸ் (கொழுப்பு அமில கோளாறுகள்)
- அமினோ ஆசிட் டிஸார்டர்ஸ் (அமினோ அமில கோளாறுகள்)

**சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ்**

இது ஒரு மரபணு நிலைமை ஆகும், இது பல்வேறு உறுப்புகளில் கோழை அடர்த்தியாகப் படிவதற்கு வழிவகுப்பதால் கடுமையான மார்பு நோய்த்தொற்றுக்கள் மற்றும் மோசமான வளர்ச்சி ஆகியவற்றுக்கு வழிவகுக்கிறது.

**பிறவி அட்ரீனல் ஹைப்பர் பிளேசியா**

இது ஹார்மோன் உற்பத்தியின் கோளாறு ஆகும், இது குழந்தையின் மெட்டாபோலிசம், நோய்த்தொற்றுக்கு எதிராகச் செயல்படுதல், உப்பு அளவுகளைக் கட்டுப்படுத்தும் திறன் மற்றும் பாலியல் பண்புகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்

**கடுமையான ஒருங்கிணைந்த நோயெதிர்ப்பு குறைபாடு (எஸ்சிஐடி)**

இந்த நிலைமை மிகவும் மோசமான நோயெதிர்ப்பு சக்தியை ஏற்படுத்துகிறது மற்றும் குழந்தை கடுமையான நோய்த்தொற்றுகளை உருவாக்கும்.

**கேலக்டோசீமியா**

கேலக்டோசீமியா கொண்டுள்ள குழந்தைகள் பால் உணவுகளைக் கொண்ட லேக்டோஸை செயலாக்க முடிவதில்லை மற்றும் அவற்றை உட்கொள்வது கல்லீரல் செயலிழப்புக்கு வழிவகுக்கும்.

**பயோட்டினிடேஸ் குறைபாடு**

இது ஒரு மெட்டாபோலிக் குறைபாடு ஆகும், இதன் காரணமாக உடல் பயோடினை மறுசுழற்சி செய்ய முடியாமற் போவதனால் அது பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. இது வலிப்புத் தாக்கங்கள், வளர்ச்சித் தாமதம் மற்றும் குறைவான தசை உறுதி போன்றவற்றை ஏற்படுத்தக்கூடும். குழந்தைகளுக்கு தோல் மற்றும் முடி அசாதாரணங்களும் இருக்கலாம்.

**இவை அனைத்தும் தீவிரமான மருத்துவ நிலைமைகளாக இருந்தாலும் கூட, அவற்றைத் தொடக்கத்திலேயே கண்டறிந்து சிகிச்சையளிப்பதால் அவை நல்ல முடிவுக்கு வழிவகுக்கும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.**

**பெரிய பலன்களோடுள்ள ஒரு சிறிய சோதனை**

ஸ்க்ரீனிங் சோதனையை நடத்த வேண்டுமானால், உங்கள் குழந்தையிடமிருந்து ஓர் சிறிய இரத்த மாதிரி அவசியமாகிறது. குதிகாலில் மென்மையாக ஊசி மூலம் குத்தி ஓர் சிறப்பான வடிகட்டி காகிதத்தில் ஒரு சில சொட்டுக்கள் இரத்தம் சேகரித்துக் கொள்ளப்படுகிறது. அந்த மாதிரியானது தேசிய விரிவாக்கப்பட்ட பச்சிளங் குழந்தை பரிசோதனை ஆய்வுக்கூடத்துக்கு பகுப்பாய்வு செய்வதற்காக அனுப்பி வைக்கப்படுகிறது. உங்கள் குழந்தையிடமிருந்து ஒரு நாள் வயது (24 மணி நேரம்) மற்றும் ஏழு நாட்கள் வயதிற்கு இடையே எப்போது வேண்டுமானாலும் இரத்த மாதிரி எடுக்கப்பட முடியும். மிகச் சிறந்த நேரமானது ஒன்று முதல் மூன்று நாட்கள் வயதிற்கு இடையேயாகும் (24 முதல் 72 மணி நேரங்கள்).

